புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Puducherry - 605009.
Cell: 7810068421,9488420449

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 176 | 31-12-2025 | புதன் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி

Volum 01 | Issue: 176 | 31-12-2025 | Wednesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## அரியலூர் சோழப்பேரரசின் மாமன்னன் ராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட பிரகதீஸ்வரரை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் குடும்பத்துடன் சாமி தரிசனம் செய்தார்



அரியலூர். டிச. 31–

பல்வேறு வரலாற்று சிறப்புமிக்க கோவில்களை நவீன கருவி மூலம் பார்த்து ரசிக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த மெய்நிகர் யதார்த்த அரங்கையும் திறந்து வைத்தார்

சோழப் பேரரசின் மாமன்னன் ராஜேந்திர சோழன் கங்கை வரை படையெடுத்து சென்று அதில் வெற்றி பெற்றதன் நினைவாக அரியலூர் மாவட்டத்தில் கங்கை கொண்ட சோழபுரம் என்ற தலைநகரை நிறுவி அங்கு சோழர்களின் கட்டிடக்கலையை விளக்கும் வகையில் பிரதீஸ்வரர் ஆலயத்தை நிறுவினார். இது உலகப் புகழ் பெற்ற சுற்றுலா தளமாகவும் பாதுகாக்கப்படும் புராதான சின்னமாகவும் விளங்கி வருகிறது. இந்நிலையில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தனது குடும்பத்துடன் பிரகதீஸ்வரர் ஆலயத்திற்கு வருகை தந்தார் மத்திய அமைச்சர் ஜெய்சங்கரை மாவட்ட ஆட்சியர் ரத்தினசாமி வரவேற்றார். மேலும் கோவில் நிர்வாகத்தின் சார்பில் வேத மந்திரங்கள் முழங்க வரவேற்பு அளிக்கப்பட்டது இதனையடுத்து தனது குடும்பத்துடன் பிரகதீஸ்வரரை வழிபட்டார். கோவில் வளாகத்தை சுற்றி வந்த மத்திய முக்கிய ஜெய்சங்கர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு கோவிலின் சிறப்பு அதில் பொறிக்கப்பட்டுள்ள சிற்பங்களின் தொன்மை அதன் சிறப்பு ஆகியவை குறித்து தொல்லியல் துறை சார்பில் விளக்கப்பட்டது மேலும் கோவில் வளாகத்தில் தனது குடும்பத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொண்டார் இதனையடுத்து கோவில் வளாகத்தில் நவீன தொழில் நுட்பத்துடன் அமைக்கப்பட்ட மெய்நிகர் யதார்த்த அரங்கினையும் திறந்து வைத்து அங்கிருந்தபடியே நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய கருவி மூலம் சித்தன்ன வாசல், தஞ்சை பெரிய கோவில் ஆகியவற்றை தத்ரூபமாக பார்த்து அதிசயித்தார். நிகழ்ச்சியில் தொல்லியல் துறை உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் விஸ்வேஷ் பா. சாஸ்திரி தலைமையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்

# தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டங்கள் குறித்த இறுதி அறிக்கையை முதலமைச்சரிடம் சமர்பித்தார் ககன்தீப் சிங் பேடி




சென்னை: டிச. 31–

தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து ஆராய்ந்திட அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையினை குழுவின் தலைவரும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளருமான ககன்தீப் சிங் பேடி முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கினார்.

பழைய ஓய்வூதிய திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத்திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் குறித்து ஆராய குழு அமைக்கப்பட்டது. ககன்தீப் சிங் தலைமையிலான 3 பேர் கொண்ட குழுவை கடந்த பிப்ரவரியில் தமிழ்நாடு அரசு அமைத்தது. 3 ஓய்வூதிய திட்டம் குறித்து குழு விரிவாக ஆராய்ந்து இறுதி அறிக்கையை அரசிடம் அளித்துள்ளது. ககன்தீப் சிங் தலைமையிலான குழு கடந்த அக்டோபர் மாதம் இடைக்கால அறிக்கையை சமர்பித்திருந்தது.

அரசு ஊழியர்களுக்கான பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகிய மூன்று ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்க ககன்தீப்சிங் பேடி தலைமையில் 3 பேர் கொண்ட குழுவை அமைத்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2003ம் ஆண்டு ஏப்.1ம் தேதி முதல் மாநில அரசுப் பணியாளர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. அதே வேளையில் மத்திய அரசுப் பணியாளர்களுக்கு தேசிய ஓய்வூதியத் திட்டம் 2004ம் ஆண்டு ஜன.1ம் தேதி முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும் மாநில அரசுப் பணியாளர்களுக்கு தொடர்ந்து பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமே தொடர அனுமதிக்கப் பட்டது.

எனினும் மாநில அரசுப்பணியாளர்கள் 2003ம் ஆண்டு ஏப்.1ம் தேதிக்கு முன்பிருந்த திட்டத்தை செயல்படுத்த வேண்டி தொடர்ந்து கோரிக்கைகளை விடுத்தது. இந்நிலையில், கடந்த ஜன.24ம் தேதி மத்திய அரசுப் பணியாளர்களுக்கான ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் குறித்த அறிவிக்கை வெளியிடப் பட்டுள்ளது,


எனவே, பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகிய மூன்று ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்திட ஒரு குழு அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. மாநில அரசின் நிதி நிலை, பணியாளர்களின் ஓய்வூதியக் கோரிக்கைகளை கருத்தில் கொண்டு நடைமுறைப்படுத்தத் தக்க உரிய ஓய்வூதிய முறை குறித்த பரிந்துரையை அரசுக்கு அளிக்க அதிகாரிகள் அடங்கிய குழுவை அமைத்து உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஊரகவளர்ச்சித் துறை செயலர் ககன்தீப்சிங் பேடி, மெட்ராஸ் ஸ்கூல் ஆப் எகனாமிக்ஸ் முன்னாள் இயக்குநர் கே.ஆர்.சண்முகம் மற்றும் நிதித்துறை துணை செயலர் பிரத்திக் தாயள் ஆகியோர் இந்த குழுவில் இடம்பெற்றுள்ளனர். இதில் பிரத்திக் தாயள் உறுப்பினர் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். இக்குழு தனது விரிவான அறிக்கை மற்றும் பரிந்துரையை 9 மாதங்களுக்குள் சமர்ப்பிக்க அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த அக்டோபர் மாதம் இடைக்கால அறிக்கையை சமர்பித்திருந்தது. தற்போது ஓய்வூதியத் திட்டங்கள் குறித்த அறிக்கையினை குழுவின் தலைவரும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளருமான ககன்தீப் சிங் பேடி முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கினார்.

# சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக கூட்டணி தான் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்து அனைத்து திட்டங்களையும் செயல்படுத்துவோம்

## திருவள்ளூரில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி பேச்சு



திருவள்ளூர் டிச 31 :

வரும் சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக கூட்டணி தான் தனிபெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சி அமைப்போம், அப்போது விடுபட்ட அனைத்து திட்டங்களையும் செயல்படுத்துவோம் என முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம் என்ற தலைப்பில் தமிழகம் முழுவதும் எடப்பாடி சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இதன் ஒரு பகுதியாக திருவள்ளூர் ஐ.சி.எம்.ஆர் முன்புள்ள மைதானத்தில் பிரசாரம் மேற்கொண்டு முன்னாள் முதல்வரும், அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி பேசியதாவது. தமிழகத்தில் 179 ஆவது தொகுதியாக திருவள்ளூர் சட்டப்பேரவை தொகுதியில் பொதுமக்களை சந்திக்கிறேன். அதோடு திமுக கூட்டணி தான் பலமான கூட்டணி என மு.க.ஸ்டாலின் பேசி வருகிறார். திமுக ஆட்சிக்கு வந்தால் கூட்டணியினர் ஆட்சியில் பங்கு கேட்போம் என ஒவ்வொரு விதமாக கூறி வரும் நிலையில் பலவீனம் ஏற்பட்டுள்ளது. இதை அறியாமல் அதிமுகவை கூட்டணி இல்லாத கட்சியென மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டு வருகிறார். அதிமுக தலைமையில் அமையும் கூட்டணிதான் வெற்றி கூட்டணியாகும்.

கடந்த 10 ஆண்டுகள் அதிமுக ஆட்சியில் இருந்த போது பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளோம். அதோடு, ஒரே ஆண்டில் மட்டும் 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் அமைத்துக் கொடுத்துள்ளோம். அதேபோல், 7 சட்டக்கல்லூரிகள், 27 தொழில்நுட்ப பயிலகம், 68 கலை அறிவியல் கல்லூரி கொண்டு வந்தோம். அதேபோல், அதிமுக ஆட்சியில் 248 தொடக்கப்பள்ளிகள் தொடங்கப்பட்டதோடு, 137 நடுநிலைப்பள்ளிகள், 1079 உயர் நிலைப்பள்ளிகள், 604 மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இதுபோன்று எந்த திட்டமும் திமுக ஆட்சியில் கொண்டு வரப்படவில்லை.

ஆனால், 210 பள்ளிகள் மூடியது தான் திமுக ஆட்சியின் சாதனையாகும். மேலும், 96 அரசு கல்லூரிகளில் முதல்வர் நியமனம் இல்லை. அதேபோல் 525 தேர்தல் வாக்குறுதிகளில் 4 இல் ஒரு பங்கு கூட நிறைவேற்றவில்லை. இதுபற்றி சட்டப்பேரவையில் பேசினால், பேசவிடாமல் தடுக்கிறார்கள். இதுதெரியாமல் ஒரு அமைச்சர் சட்டப்பேரவையில் பேசாமல், வெளியில் பேசி வருவதாக என்னைப்பற்றி கூறி வருகிறார். எனவே உங்களுக்கு தில்லு, தெம்பு, திராணி இருந்தால் சட்டப்பேரவையில் நான் பேசுவதையும் மற்றும் அனைத்தையும் நேரடியாக ஒலிப்பரப்ப முடியுமா.

அரசு டாஸ்மாக் கடையில் நாள்தோறும் 1.50 கோடி மதுப் புட்டிகள் விற்பனையாகிறது. இந்த மதுப்புட்டிகளுக்கு ரூ.10 கூடுதலாக பெறுவதன் மூலம் நாள்தோறும் ரூ.15 கோடி முறைகேடாக வருவாய் ஈட்டி வருகின்றனர். மேலும் பொங்கல் தொகுப்புடன் 5000 வழங்க வேண்டும் இதுபோன்ற ஆட்சிக்கு பொதுமக்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். எனவே வரும் சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக தனிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சி அமைப்போம். அதிமுக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களான மடிக்கணினிகள், தாலிக்கு தங்கம்,100 நாள் வேலையை 150 நாட்களாக உயர்த்தப்படும் என உள்ளிட்ட பல்வேறு திட்டங்களையும் மீண்டும் செயல்படுத்தவோம் என அவர் தெரிவித்தார்.

அப்போது, முன்னாள் அமைச்சர் பி.வி.ரமணா, முன்னாள் மக்களவை உறுப்பினர் கோ.அரி, நகர செயலாளர் கந்தசாமி, ஒன்றிய செயலாளர்கள் பூண்டி மாதவன், சுதாகர், மாவட்ட துணைச்செயலாளர் சிற்றம்பாக்கம் சீனிவாசன், மாவட்ட மாணவரணி செயலாளர் பி.வி.பாலாஜி, நிர்வாகிகள் எழிலரசன், ஜோதி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# நெடுஞ்சாலைத்துறையின் செயல்பாடுகள் குறித்து அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு



சென்னை: டிச.31–

கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் பொதுப் பணிகள், நெடுஞ் சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

நெடுஞ்சாலைத் துறையின் செயல்பாடுகள் குறித்து,நேற்று (30.12.2025) சென்னை, கிண்டி, நெடுஞ் சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள கூட்டரங்கில், பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் அனைத்து தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்டப்பொறியாளர்கள் பங்கு பெற்றனர்.

ஆய்வுக் கூட்டத்தை தொடங்கி வைத்து அமைச்சர் அவர்கள், இதுவரை மேற்கொண்டப் பணிகள் குறித்தும், நிதி ஒதுக்கீடு செலவின விவரங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, தக்க அறிவுரைகள் வழங்கினார்கள்.

சாலைப் பழுதுகள், அதாவது சாலையில் ஏற்பட்ட நொடிகள், பேட்ச் ஓர்க் செய்து நல்ல முறையில் பராமரிக்க வேண்டும் என்றும், சாலை ஓரங்களில் உள்ள முட்புதர்களை அகற்ற வேண்டும் என்றும் மலைப் பிரதேசங்களில் சாலை ஓரங்களில் உள்ள முட்புதர்களை அகற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். சாலைப் புருவங்கள் தார் சாலையின் மட்டத்தை விட உயரமாக உள்ளதால் மழைநீர் வடிய இயலாத நிலை உள்ளது. மழைநீர் வடிய ஏதுவாக சாலை புருவங்களை சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

கிலோ மீட்டர் கற்கள் மற்றும் பர்லாங் கற்கள் இல்லாத இடங்களை கண்டறிந்து அந்த இடங்களில் கற்களைவி நடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தப் பணிகளை எல்லாம் ஆய்வு செய்ய நியமனம் செய்யப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் உடனடியாக ஆய்வு செய்து அறிக்கை அனுப்ப வேண்டும் என்று அறிவுறுத்தினார். அமைச்சர் அவர்களின் தொடக்க உரையை தொடர்ந்து நெடுஞ் சாலைத்துறையின் செயல்பாடுகளை ஒவ்வொன்றாக ஆய்வு செய்தார்.

இந்த இந்த ஆய்வுக் கூட்டத்தில், நெடுஞ் சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச்செயலாளர் டாக்டர் இரா.செல்வராஜ், நெடுஞ் சாலைத்துறை திட்ட இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன், தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கு.கோ. சத்தியபிரகாஷ், சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர், முதன்மை இயக்குநர் இரா.செல்லதுரை, தரக்கட்டுப்பாடு இயக்குநர் எம்.சரவணன், கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்ட பொறியாளர்கள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கொம்பாக்கம் குப்பம்பேட்டில் ரூ.19.37 லட்சம் செலவில் கருமாதி கொட்டகை கட்டும் பணி

## எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தொடங்கி வைத்தார் !





புதுச்சேரி, டிச. 31–

புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்ற தொகுதி, புதுச்சேரி நகராட்சி, கொம்பாக்கம் வார்டுக்கு உட்பட்ட குப்பம்பேட் பகுதியில் ரூபாய். 19,37,491/ மதிப்பீட்டில் புதுச்சேரி நகராட்சி மூலம் கருமாதி கொட்டகை கட்டும் பணிக்கான பூமி பூஜை நிகழ்ச்சி இன்று காலை நடந்தது.

இதில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் கலந்து கொண்டு, கருமாதி கொட்டகை கட்டும் பணியை பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், புதுச்சேரி நகராட்சி உதவி பொறியாளர் வெங்கடாஜலபதி, இளநிலை பொறியாளர் ஞானசேகர், ஊர் முக்கியஸ்தர்கள் ரவி, ஆறுமுகம், சக்திவேல், முன்னாள் கவுன்சிலர் கந்தசாமி, ஜெகன் மோகன், ஜனா, சுரேஷ், வங்கி சுரேஷ், மிலிட்டரி சம்பத், பிரேம்குமார், பிரகாஷ், நிர்மல், வீரப்பன், கவுதம், ஹேமநாத், பரத், கோகுல், வாக்கல்யாண், பரமசிவம், அருண், சத்தியசீலன், சுகுமார், திமுக தொகுதி செயலாளர் மணிகண்டன், பொதுக்குழு உறுப்பினர் செல்வநாதன், துணை அமைப்பாளர்கள் தேசிங்கு, ராமதாஸ், ஆதி திராவிடர் அணி துணைத் தலைவர் கதிரவன், கோபி, செயற்குழு உறுப்பினர் சுப்ரமணி, தொகுதி துணைச் செயலாளர் ஹரிகிருஷ்ணன், கிளைக் கழக நிர்வாகிகள் சேகர், கமால்பாஷா, பிரகாஷ், பாஸ்கர், ரமேஷ், மிலிட்டரி முருகன், இளங்கோவன், முருகையன், ராஜேஷ், முத்து, குமார், பிரவீன், ராஜா, கோவிந்தராஜ், மாணிக்கம், நாகராஜ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# கே.எம்.எஸ் சம்பா கொள்முதல் பருவ நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் கொள்முதல் பணிகள்

## அமைச்சர் சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்

திருவள்ளூர் டிச 31 :

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், புதுமாவிலங்கை ஊராட்சியில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சார்பில் கே.எம்.எஸ் சம்பா கொள்முதல் பருவ நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் கொள்முதல் பணிகளை தொடங்கி வைத்து பேசினார்.



முதலமைச்சர் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் பயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்காக 29 லட்சத்து 34 ஆயிரம் விவசாயிகளுக்கு 5,148 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. கடந்த மூன்றறை ஆண்டுகளில் மழை, வறட்சி ஆகிய பேரிடர்களால் 19.84 லட்சம் ஏக்கர் நிலங்களில் பாதிக்கப் பட்ட பயிர்ச் சேதங்களுக்கு மொத்தம் 833.88 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டு 11.95 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

தென் மாவட்டங்களில் பெருமழை பாதிப்புகளால் ஏற்பட்ட தோட்டக்கலைப் பயிர்கள் பாதிப்புகளுக்கு மட்டும் 1,19,519 விவசாயிகளுக்கு 91 கோடியே 7 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. 27.5 கோடி ரூபாய் செலவில் 100 உழவர் சந்தைகள் புனரமைக்கப்பட்டுள்ளன. 14 புதிய உழவர் சந்தைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2 கோடியே 75 லட்சம் ரூபாய் செலவில் 25 உழவர் சந்தைகளில் காய்கறி கழிவுகளை உரமாக்கும் இயந்திரம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருவாரூர் உழவர்சந்தை புதுப் பொலிவுடன் மறுகட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது.

முதலாண்டிலேயே உணவு தானிய உற்பத்தி முந்தைய ஆண்டை விட 11 சதவீதம் அதிகரித்து 11.74 லட்சம் மெட்ரிக் டன்னாக தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 187 கோடி ரூபாய் ஒதுக்கீட்டிலான குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டம் வாயிலாக விவசாயிகளுக்கு அளித்த ஊக்கத்தினால் 2021ல் 4.90 இலட்சம் ஏக்கரிலும், 2022 ல் 5.36 லட்சம் ஏக்கரிலும் 2023 ம் ஆண்டில் 48 ஆண்டுகளாக இல்லாத சாதனையாக 5.59 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டு உற்பத்தி அதிகரித்து விவசாயிகள் பயனடைந்தனர். திராவிட மாடல் அரசினால் ரூ.39.77 கோடி செலவில் 2,33,701 விவசாயிகளுக்கு வேளாண் கருவித் தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

திருவள்ளூர் மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் 47,641 ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டு, 2,62,025 மெட்ரிக்டன் மகசூல் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக 70 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 1,25,000 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாகப் பணம் செலுத்தப்பட உள்ளது. கடந்த சொர்ணவாரி பருவத்தில் மாவட்டத்தில் 66 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 84,766 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 11,391 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய ரூ. 215 கோடியே 47 லட்சம் தொகை அவர்களின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது என அமைச்சர் அவர்கள் கூறினார்.

இதில் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன், த.நு.வா.க மண்டல மேலாளர் செல்வம், இணை இயக்குநர் (வேளாண்மை) செல்வராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வேதவல்லி, த.நு.வா.க துணை மண்டல மேலாளர் சீனிவாசன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மு. லாவண்யா அவர்களின் மக்கள் நலப்பணிகள் புதுச்சேரி உழவர்கரை தொகுதியைச் சேர்ந்த அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் பிரமுகர் மு. லாவண்யா அவர்கள் மேற்கொண்ட சமூக நலப் பணிகள்.

புதுச்சேரி, டிச. 31–

உழவர்கரை டாக்டர் அம்பேத்கர் அரசுப் பள்ளி வளாகத்தில் நீண்ட நாட்களாக மண்டிக் கிடந்த முட்புதர்கள் மற்றும் தேவையற்ற செடிகள் அகற்றப்பட்டன.



இதனால் மாணவர்கள் டெங்கு போன்ற நோய்களில் இருந்து பாதுகாக்கப் படுவார்கள். மேலும், அங்கு கொசு மருந்து அடிப்பதற்கும் அவர் உறுதி அளித்துள்ளார்.

கலை மேடை தூய்மை : பிச்சைவரம் பட்டு பகுதியில் பொது மக்களால் வீசப்பட்ட குப்பைகள் மற்றும் கழிவுகள் கலை மேடைப் பகுதியில் குவிந்து கிடந்தன. தன்னார்வலர் களுடன் இணைந்து அந்தப் பகுதியைச் சீரமைத்து, மீண்டும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஏற்ற வாறு மாற்றியுள்ளார்.

தூய்மைப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, பிச்சைவரம்பட்டு பகுதியைச் சேர்ந்த ஒரு நபர் நோயால் பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்து, அவரது மருத்துவச் செலவுக்காக உடனடியாக நிதியுதவி வழங்கினார்.

கூடுதல் தகவல்கள்: இந்தப் பணிகளுக்காக ஊர் பஞ்சாயத்தார்கள், பொதுமக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் மு. லாவண்யா அவர்களுக்குத் தங்களது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.



தமிழக முதலமைச்சர் பள்ளி மாணவர்களின் நலனில் பல நல்ல விஷயங்களை செய்து கொண்டிருக்கும்போது எடப்பாடி பழனிசாமி கூறுவது அரைவேக்காட்டுத்தனமான குற்றச்சாட்டு காட்பாடியில் வேலூர் நாடாளுமன்ற கதிர் ஆனந்த் உறுப்பினர் பேட்டி

# விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொதுமக்கள் மனு



கண்டமங்கலம், டிச.31:

விழுப்புரம் மாவட்டத்திற்கு உட்பட்ட கண்டமங்கலம் கோண்டூர் பகுதிகளில் உயர் மின் அழுத்த கோபுரம் அமைப்பது தொடர்பாகவும், விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டி மனு அளித்துள்ளனர்.

விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில், விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகள் வழியாக உயர் அழுத்த மின் கோரங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது. இதனால் விவசாயிகளின் விளை நிலங்கள் சேதமடைவதுடன், பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, 500 எக்கர் பரப்பளவில் உள்ள விவசாய நிலங்களில் தென்னை, கரும்பு, நெல் உள்ளிட்ட பயிர்கள் சேதமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், மாற்றுப் பாதையில் உயர் அழுத்த மின்கோரங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர். இதற்கு நில உரிமையாளர்களிடம் எந்தவித முன் ஆலோசனையோ அல்லது அறிவிப்பு எதுவும் இன்றி இந்த உயிர் மின்னழுத்த கோபுரம் அமைக்கப்பட்டு வருகிறது இந்த உயிர் அழுத்தம் மின் கோபுரத்தை மாற்றுப் பாதையில் அமைக்க வேண்டும் என இந்த மனுவை விழுப்புரம் மாவட்ட ஆட்சியரிடம் பொதுமக்கள் வழங்கினார் அதோடு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயற்பொறியாளர் (Executive Engineer), சிறப்பு அதிகாரி மற்றும் மாவட்ட நிர்வாக அதிகாரிகளிடம் பொதுமக்கள் ஒப்படைத்துள்ளனர்.

மக்களின் கோரிக்கையை பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.



திருச்சி மாவட்டம் , துவரங்குறிச்சி அருகே மருங்காபுரியில் வளர்ப்பு வெள்ளாடுகளை தெரு நாய்கள் கடித்து குதரி வருகின்றன என அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் ஊராட்சி நிர்வாகத்திடம் பலமுறை முறையிட்டும் எந்த விதமான நடவடிக்கையும் இல்லை என வேதனை அளிக்கின்றனர். எனவே ஊராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுப்பார்களா? கோரிக்கை.

# விழிப்புணர்வை ஏற்படுத்திய சுங்கச்சாவடி ஊழியர்கள்.

மணப்பாறை டிசம்பர் 31

திருச்சி மாவட்டம் வையம்பட்டி அருகே உள்ள பொன்னம்பலம்பட்டி சுங்கச்சாவடியில் திட்ட இயக்குனர் அருண்பிரசாத் உத்தரவின் அடிப் படையில் ப்ராஜெக்ட் டைரக்டர் செந்தில்குமரன் தலைமையிலான சுங்கச்சாவடி ஊழியர்கள் பொன்னம்பலம்பட்டி சுங்கச்சாவடி வழியாக சென்ற இரு சக்கர வாகன



ஓட்டுனர்களுக்கு ஹெல்மெட்டுகள் வழங்கியும் இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒளிரும் ஸ்டிக்கர் மற்றும் துண்டு பிரசுரங்களை வழங்கியும் இரவு நேரங்களில் கனரக வாகனங்களில் செல்லும் வாகன ஓட்டுனர்களுக்கு தேநீர் வழங்கியும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்

# சங்கராபுரம் அருகே பூட்டை கிராமங்களில் அதிகரிக்கும் திருட்டு பகல் நேரத்திலும் அச்சத்தில் பொதுமக்கள்



சங்கராபுரம் டிச 31

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அருகே உள்ள பூட்டை கிராமங்களில் கடந்த சில வாரங்களாக திருட்டு சம்பவங்கள் அதிகரித்து வருவதால், பொதுமக்கள் கடும் அச்சத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

பூட்டை கிராமம் கெங்கையம்மன் கோவில் தெருவில் வசிக்கும் விருத்தாம்மாள் (க/பெ. தங்கராசு) என்பவரது வீட்டில், டிச 28 அன்று மாலை மர்ம நபர்கள் பூட்டை உடைத்து உள்ளே புகுந்து பீரோவை திறந்து தங்க நகைகள் 5 பவுன் மற்றும் பணம் 40 ஆயிரம் ரூபாய் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக சங்கராபுரம் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து, சம்பவ இடத்தை ஆய்வு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். அருகாமை பகுதிகளில் பொருத்தப் பட்டுள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகள் சேகரிக் கப்பட்டு வருவதாக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேபோன்று, பூட்டை உள்ளிட்ட சுற்று வட்டார கிராமங்களில் இருசக்கர வாகனங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், தங்க நகைகள், ஆடு, மாடு போன்ற கால்நடைகள் வரை திருட்டுக்கு உள்ளாகி வருவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். இரவு நேரங்களில் மட்டுமல்லாமல், பகல் நேரங்களிலும் திருட்டு சம்பவங்கள் நடைபெறுவது பொது மக்களிடையே பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருட்டு சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதற்கு காவல்துறையின் ரோந்து பணிகள் போதிய அளவில் இல்லை என பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். இதனால் வீடுகளை பூட்டிவிட்டு வெளியே செல்லவும், வணிகர்கள் கடைகளை மூடிவிட்டு வீடு திரும்பவும் அச்சத்துடன் இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக கூறுகின்றனர்.

இந்த நிலையில், காவல்துறையினர் கிராமப்பகுதிகளில் ரோந்து பணிகளை உடனடியாக தீவிரப் படுத்த வேண்டும் என்றும், ஊராட்சி நிர்வாகம் முக்கிய தெருக்கள், சந்திப்புகள் மற்றும் வணிக பகுதிகளில் கண்காணிப்பு கேமராக்கள் அமைக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# விழுப்புரம் ஆட்சியரக பெருந்திட்ட வளாகத்தில் CCTV கண்காணிப்பு அறை திறப்பு



விழுப்புரம் நகரம் முழுவதும் சுமார் 18 கிலோ மீட்டர் தூரத்திற்கு தனியார்(மஹாலட்சுமி குரூப்ஸ்) பங்களிப்புடன் பொருத்தப்பட்டுள்ள 100 சி சி டி வி கண்காணிப்பு கேமரா கட்டுப்பாட்டு அறையினை விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரகுமான் திறந்து வைத்தார். *இந்நிகழ்வில் விழுப்புரம் சரக டிஐஜி உமா, விழுப்புரம் எஸ்பி சரவணன் மற்றும் மஹாலட்சுமி குரூப்ஸ் பிரகாஷ் மற்றும் காவல் துறை அலுவலர்கள் ஜூனியர் ரெட் கிராஸ் மாவட்ட கன்வீனர் முனைவர். ம.பாபு செல்வதுரை ஆகியோர் உடன் இருந்தனர்.

# செஞ்சி நகர தேமுதிகவினர் இரண்டாம் ஆண்டு குருபூஜை மலர் தூவி மரியாதை



விழுப்புரம். டிச. 31–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பகுதியில் தேமுதிகவினர் மாவட்டக் கழக செயலாளர் எல் வெங்கடேசன் முன்னாள் எம்எல்ஏ தலைமை தாங்கினார்.

ஜி குணசேகரன் செஞ்சி பகுதி செயலாளர். முன்னாள் செஞ்சி செயலாளர் பி பழனி நகர அவை தலைவர் கே ராஜா

செஞ்சி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் எம் அருள் முருகன் செஞ்சி சட்ட மன்ற தொகுதி பொறுப்பாளர் எல் தயாநிதி மாவட்ட கழக பொருளாளர் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் எம் ஜி சின்னதுரை மாவட்ட கேப்டன் மன்ற செயலாளர் எம் சி ரமேஷ் மேல்மலையனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் வி. ரங்கநாதன் செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் கே பி பிரபு பாலசுந்தர் வல்லம் தெற்கு ஒன்றிய செயலாளர் மாவட்ட இளைஞரணி துணைச் செயலாளர் ஜி எஸ் ஆர் பிரபாகரன் மாநில பொதுக்குழு உறுப்பினர் ஆர் விஜயகுமார் மாவட்ட வழக்கறிஞர் அணி செயலாளர் ஏ வேலாயுதம் முன்னிலை வகித்தனர்.

செஞ்சி நகர நிர்வாகிகள் நகர துணைச் செயலாளர் சரவணன் நகரத் துணைச் செயலாளர் என்ற ரவி நகரத் துணைச் செயலாளர் முருகன் நகரத் துணைச் செயலாளர் புல்லட் மணி நகர மாவட்ட கழக பிரதிநிதி செல்வராஜ் நகர இளைஞரணி செயலாளர் பூபதி விஜயகுமார் சையத் இஸ்மாயில் கார்த்தி செஞ்சி ஒன்றிய கழக நிர்வாகிகள் விஜயன் சங்கரபாணி சத்தியவீரன் மனோகரன் செஞ்சி மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் சார்ந்த செய்தன் சக்தி ஆகியோர் கலந்து கொண்டனர். ழிநகர கழக பொருளாளர் ஓவியர் சசிகுமார் நன்றியுரை கூறி நிகழ்வு நிறைவுற்றது.

# திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சி மணப்பாறை தேசிய நெடுஞ்சாலையில் காரைப்பட்டியில் அப்பகுதி பொதுமக்கள் சாலை மறியல் போக்குவரத்து பாதிப்பு



திருச்சி டிச 31:

திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சி மணப்பாறை தேசிய நெடுஞ்சாலையில் காரைப்பட்டி என்னுமிடத்தில் அப்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பேர் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். மேலும் கோரிக்கைகளான தேசிய நான்கு வழிச் சாலையை காரைப்பட்டி என்னும் இடத்தில் அப்பகுதி செல்லும் வாகன ஓட்டிகள் அடிக்கடி விபத்து ஏற்படுவாதாக இதனை கண்டித்து அப்பகுதி மக்கள் சாலையை சீர் செய்து தர மறுப்பதாக சாலை மறியலில் ஈடுபட்டனர் ,மேலும் போக்குவரத்து பாதிப்பு தகவல் அறிந்து வந்த மணப்பாறை காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் துவரங்குறிச்சி போலீசார் குழுவுடன் பொது மக்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினர் . அப்போது சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் வந்தால் மட்டுமே சாலை மறியலை கைவிடுவதாக உறுதி அளித்தனர் ,மேலும் தகவல் அறிந்து வந்த தேசிய நெடுஞ் சாலைத் துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் பொதுமக்களிடம் சாலையை விரைந்து சரி செய்து தருவதாக உறுதி அளித்ததன் பேரில் அப்பகுதி மக்கள் சாலை மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# கோவை இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி DANA (தானா) இரத்த சேகரிப்பு மையத்தில் இரத்த தானம் துவக்கம்!!



கோவை டிசம்பர்: 31

கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி DANA (தானா) இரத்த சேகரிப்பு மையத்தில் இரத்த தானத்தை ரெட் கிராஸ் சொசைட்டி சேர்பெர்சன் நந்தினி ரங்கசாமி துவக்கி வைத்தார்..

இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி சார்பாக (DANA) தானா ரெட் கிராஸ் இரத்த சேகரிப்பு மையம் கோவை கவுண்டம் பாளையம் பகுதியில் உள்ள ரெட் கிராஸ் சொசைட்டி வளாகத்தில் அண்மையில் துவங்கப்பட்டது..

DANA (தானா) இரத்த சேகரிப்பு மையத்தில் மிக அதிநவீன தொழில் நுட்ப உபகரணங்களை கொண்டு , இரத்தம் சேகரிக்கப் பட்டு, அதனை பாதுகாப்பாக சேமித்து வைத்து பல மருத்துவ மனைகளின் இரத்த விநியோகத் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக துவங்கப்பட்டுள்ளது..

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விலையில் இலாப நோக்கற்ற அடிப்படையில் நோயாளிகளுக்கு இரத்தத்தை DANA (தானா) சேகரிப்பு மையம் வழங்க உள்ளது..

இந்நிலையில் DANA (தானா) இரத்த சேகரிப்பு மையத்தில் இரத்த தானம் துவங்கப்பட்டது..

இதற்கான துவக்க நிகழ்ச்சியில், ரெட் கிராஸ் சொசைட்டி சேர்பெர்சன் இரத்த தானத்தை துவக்கி வைத்தார்..

இதில் அவருடன் இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினர் மோகன் சங்கர், பொருளாளர் கலாவதி, செயலாளர் பூங்கோதை உள்ளிட்டோர் உடனிருந்தனர்..

முதல் நாளாக துவங்கப்பட்ட இரத்த தான நிகழ்வில், கோவை ஜி. ஆர். ஜி. கல்வி நிறுவனம், சந்திரா குழும நிறுவனம், சந்திரகாந்தி பப்ளிக் பள்ளி, லட்சுமி கிரஹா எண்டர்பிரைசஸ், சந்திரா ஹுண்டாய் மற்றும் சந்திரா ஹோண்டா உள்ளிட்ட நிறுவனங்களை சேர்ந்த ஊழியர்கள் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர்..

கோவை கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள ரெட் கிராஸ் சொசைட்டி வளாகத்தில் இந்திய செஞ்சிலுவை சங்கம் பராமரிக்கப்பட்டு இயக்கப்பட உள்ள இந்த இரத்த மையத்தில், ஒவ்வொரு மாதமும் சுமார் 500 க்கும் மேற்பட்ட நன்கொடையாளர்களைச் செயல்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# திருவள்ளூர் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் 410 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன

திருவள்ளூர் டிச 31 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பொதுமக்கள், தங்களது குறைகளை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும் பொது பிரச்சனைகள் தொடர்பாக உதவிகள் வேண்டியும் 410 மனுக்களை மாவட்ட ஆட்சியரிடம் வழங்கினர். இதில், நிலம் சம்பந்தமாக 133 மனுக்களும் சமூக பாதுகாப்பு திட்டம் தொடர்பாக 64 மனுக்களும்



வேலைவாய்ப்பு வேண்டி 45 மனுக்களும் பசுமை வீடு, அடிப்படை வசதிகள் வேண்டி67 மனுக்களும் மற்றும் இதர துறைகள் சார்பாக 101 மனுக்களும் என மொத்தம் 410 மனுக்கள் பெறப்பட்டது. இம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு தகுதியுள்ள பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் அறிவுறுத்தினார்.

கூட்டத்தில், உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெங்கட்ராமன், தனித்துணை ஆட்சியர் பாலமுருகன், உதவி ஆணையர் (கலால்) கணேசன், திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் இரவிச்சந்திரன், மாவட்ட வழங்கல் அலுவலர் வெங்கடேசன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சீனிவாசன், துணை ஆட்சியர் (பயிற்சி) செ.சண்முக பிரீத்தா, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஏற்காட்டில் இளம் பெண் கழுத்தை துப்பட்டாவால் இறுக்கிக் கொன்ற கள்ளக்காதலன்

ஏற்காடு : டிச 31

சேலம் மாவட்டம் ஏற்காடு மாரமங்கலம் பகுதியை சேர்ந்த சண்முகம் என்பவருக்கும் சுமதி என்ற பெண்ணுக்கு கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. இன்னிலையில் சுமதிக்கும் அதே பகுதியைச் சேர்ந்த கோவிந்தன் என்பவரது மகன் வெங்கடேஷ் வயது 23





என்பவருடன் இன்ஸ்டாகிராம் மூலமாக பழகி வந்து கள்ளக்காதல் ஏற்பட்டது கடந்த 23ஆம் தேதி வீட்டில் இருந்த சுமதி காணவில்லை என்று அவரது கணவர் சண்முகம் என்பவர் புகார் அளித்ததை தொடர்ந்து ஏற்காடு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்ததில் சுமதி வெங்கடேஷ் தனிமையில் இருந்த போது சுமதியின் செல்போனுக்கு வந்த அழைப்பு தொடர்பாக ஏற்பட்ட தகராறில் வெங்கடேஷ் சுமதியின் துப்பட்டாவால் கழுத்தை நெறித்து கொலை செய்து கொட்டச்சேடில் இருந்து குப்பனூர் செல்லும் சாலையில் உள்ள சுமார் 200 அடி பள்ளத்தில் சாக்கு மூட்டையில் கட்டி வீசிவிட்டார் என்பது விசாரணையில் தெரியவந்தது அதனை தொடர்ந்து அவரை கைது செய்து நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பும் பணி நடைபெற்று வருகிறது.

# தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி சார்பில் 2026 ல் விராலிமலை சட்டமன்ற தொகுதியில் விருப்ப மனு அளித்தனர்:



புதுக்கோட்டை டிச 31 :

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் , விராலிமலை சட்டமன்ற தொகுதி தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி சார்பாக 2026 ல் விராலிமலை சட்டமன்ற தொகுதியில் போட்டியிடுவதாக அக்கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் விருப்பமான அளித்தனர். இந்நிகழ்வில் விராலிமலை கிழக்கு வட்டார தலைவர் சர்தார் குமாரசாமி, விராலிமலை பேன்சி நாகராஜ் , மாவட்ட தலைவர் ராயல் முருகேசன் , விராலிமலை மேற்கு வட்டார தலைவர் ஏழுமலை, ஒன்றிய குழு உறுப்பினர் அன்பழகன் மற்றும் ஆலோசனை குழு உறுப்பினர் பாலாஜி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# செஞ்சி கூட்ரோட்டில் அமைந்துள்ள சென்னை பேருந்து நிறுத்தத்தை கூட்ட நெரிசல் காரணமாக பயணிகளின் பாதுகாப்பு கருதி உடனடியாக இடம் மாற்ற கோரும் மனு





ஊழல் தடுப்பு பவுண்டேஷன் ஆப் இந்தியாயுடைய மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் திரு.ம. லூர்து சாவியோ அவர்களின் தலைமையில் கூட்ட நெரிசல் காரணமாக பயணிகளின் பாதுகாப்பு நலன் கருதி செஞ்சி கூட்ரோட்டின் அருகாமையில் அமைந்துள்ள சென்னை பேருந்து நிறுத்தத்தை வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் போதுமான இடம் இருப்பதால் சென்னை பேருந்துகளை ஆங்கு நிறுத்த வழிவகை செய்ய மாவட்ட ஆட்சியர் மற்றும் உரிய அலுவலகங்களுக்கு மனு அனுப்பப்பட்டு மேலும் அச்சங்கத்தினர் செஞ்சி காவல் நிலையத்திலும் செஞ்சி சரகு துணை கண்காணிப்பாளர் அவர்கள் அலுவலகத்திலும் நேரில் சென்று உடனடியாக இடமாற்றம் செய்ய புகார் மனு அளிக்கப்பட்டதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.



திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திற்கு வருகை தந்த துணை குடியரசுத் தலைவர் இராதாகிருஷ்ணன் அவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் பூங்கொத்து வழங்கி வரவேற்று வழியனுப்பி வைத்தார்.



நாமக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள வாக்குப்பதிவு இயந்திர கிடங்கில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதல்நிலை சரிபார்ப்பு பணி நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# ஏற்காட்டில் இலவச ரத்ததான முகாம் !





ஏற்காடு தொண்டு நிறுவனத்தின் சார்பாக இரண்டாம் ஆண்டு ரத்ததான முகாம் ஏற்காடு வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்றது இந்த முகாமில் ஏற்காடு சுற்றுவட்டார பகுதியைச் சேர்ந்த ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டு சேலம் அரசு ரத்த வங்கிக்கு ரத்ததானம் வழங்கினார்கள்

# அமெரிக்க பெண்ணை காதலித்து கரம் பிடித்த கோவை இளைஞர்



கோவை குனியமுத்தூர்: 31

அமெரிக்காவில் ஏரோஸ்பேஸ் நிறுவனத்தில் பணியாற்றும் கோவையை இளைஞர் அமெரிக்க பெண்ணை இந்திய கலாச்சார முறைப்படி கோவையில் திருமணம் செய்து கொண்டார்..

கோவை குனியமுத்தூர் பகுதியில் வசித்து வருபவர் ராமன் நம்பீசன் மற்றும் உமா ஆகிய தம்பதியரின் மகன் வாசுதேவன்..

அமெரிக்க நாட்டில் உள்ள ஏரோஸ்பேஸ் நிறுவனத்தில் பணியாற்றி வரும் வாசுதேவன் அமெரிக்க நாட்டை சேர்ந்த கரோலின் கஸாஸ் என்ற பெண்ணை காதலித்து வந்துள்ளார்..

இதனை தொடர்ந்து இரு வீட்டாரின் சம்மதத்துடன் இந்தியா வந்த இருவருக்கும் கோவை கே.ஜி.சாவடி பகுதியில் உள்ள ஹார்மனி. சம்மிட் கன்வென்ஷன் அரங்கில் திருமணம் நடைபெற்றது..

வாசுதேவன் கேரளாவை சேர்ந்தவர் என்பதால் கேரள முறைப்படி நடைபெற்ற திருமண விழாவில் அமெரிக்காவில் இருந்து வந்த பெண்ணின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்ஞ்

கேரள கலாச்சார முறைப்படி பெண் அழைப்பு, மாப்பிள்ளை அழைப்புடன் நடைபெற்ற திருமண விழாவில் பட்டு வேட்டி, புடவை அணிந்து அமெரிக்க குடும்பத்தினர் கலந்து கொண்டுள்ளது கவனத்தை ஈர்த்துள்ளது.

வெளிநாட்டில் வசித்தாலும் தங்கள் கலாச்சாரத்தை மறக்காமல் திருமணத்தை நடத்தியுள்ள வாசு தேவன் குடும்பத் தினருக்கு பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்...

# ஈரோட்டில் கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனை துவக்க விழா.. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் மு பெ சாமிநாதன் துவக்கி வைத்தார்.





ஈரோடு. டிச. 31

ஈரோட்டில் நேற்று மாநில அளவிலான கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனை துவக்க விழா நடைபெற்றது.

மாநில அளவிலான கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனை துவக்க விழா நேற்று ஈரோட்டில் உள்ள ஏ எம் என்ற தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனை துவக்க விழா நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர்ச. கந்தசாமி தலைமை வகித்தார்.

தமிழ்நாடு தமிழ் வளர்ச்சி துறை மற்றும் செய்தி துறை அமைச்சர் முகேஷ் சாமிநாதன் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனையை துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் அவர் தெரிவித்ததாவது...

கைத்தறி நெசவுத்தொழில் என்பது இந்தியாவின் பாரம்பரியமிக்க கலாச்சாரம் தன்மை கொண்ட ஒரு தொழிலாக விளங்குகிறது. இது நாட்டின் விவசாயத்திற்கு அடுத்தப்படியான மிகப்பெரிய வேலைவாய்ப்பு மிக்க ஒரு தொழிலாகவும் இருந்து வருகிறது. இந்த கைத்தறி தொழில் என்பது கைத்திறன் மிக்க தொழில்நுட்ப கலைநயம் கொண்டது. தமிழ் நாட்டில் ஆண்டாண்டு காலமாக பெரிய அளவில் கைத்தறி நெசவு என்பது புகழ்பெற்று விளங்கி வருகிறது.

மேலும் மத்திய கைத்தறி அமைச்சகத்தின் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 2025.. 2026 ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனை புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகை முன்னிட்டு ஈரோடு மாவட்டத்தில் நேற்று(30/12/2025 முதல் அடுத்த மாதம் ஜனவரி(12/1/ 2026) வரை மொத்தம் 14 நாட்கள் இந்த கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனையகம் செயல்பட உள்ளது.

மேலும் இந்த கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனையகத்தில் மாநிலத்தில் உள்ள ஈரோடு, சேலம், திருப்பூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி, நாகர்கோவில், கடலூர் உள்ளிட்ட 17 மாவட்டங்களை சேர்ந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், ஈரோடு கோ ஆப் டெக்ஸ், நிறுவனம், நெசவாளர் சேவை மையம், பூம்புகார் விற்பனை நிலையம், காதி கிராம தொழில் வாரியம், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்ககம்( மகளிர் திட்டம்) மற்றும் வெளி மாநில கூட்டுறவு சங்கங்கள் இந்த கண்காட்சியில் கலந்து கொண்டனர்.

ஈரோட்டில் நேற்று துவங்கப்பட்ட கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனையகத்தில் 60 அரங்கங்கள், 116 கூட்டுறவு சங்கங்களின் பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது.

இதில் தங்களின் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட பெட்ஷீட், படுக்கை வெறிப்புகள் கால் மிதியடிகள், வேட்டி சட்டைகள், காஞ்சிபுரம் மற்றும் திருபுவனம் பட்டு சேலைகள், லுங்கிகள் மற்றும் பலதரப்பட்ட கைவினைப் பொருட்கள் கண்காட்சியில் இடம் பெற்று விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது.

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கைத்தறி ஜவுளி ரகங்களுக்கு தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ள 30 சதவிகிதம் தள்ளுபடி விலையில் இந்த கண்காட்சியில் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த கண்காட்சியில் 2 கோடி ரூபாய் அளவில் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம், சென்னிமலை பேரூராட்சி தலைவர் ஸ்ரீ தேவி, துணி நூல் பதனிடும் ஆலை செயல் ஆட்சியர்( துணை இயக்குனர்) சிவக்குமார், நெசவாளர் சேவை மைய துணை இயக்குனர் ( சேலம்) கார்த்திகேயன், உதவி இயக்குனர்( கைத்தறித் துறை ) சரவணன் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சேலம் மற்றும் கள்ளக்குறிச்சியில் ஜனவரி 4 மற்றும் 5ம் தேதி அதிமுக பொதுக்கூட்டம்..!!

சென்னை: டிச.31–

சேலம் மற்றும் கள்ளக்குறிச்சியில் ஜனவரி 4 மற்றும் 5ம் தேதி அதிமுக பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. ஜனவரி 4, 5ம் தேதிகளில் நடைபெறும் அதிமுக பொதுக்கூட்டங்களில் எடப்பாடி பழனிசாமி சிறப்புரை ஆற்றுகிறார். சேலம் மாவட்டம் வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் ஜனவரி 4ம் தேதி அதிமுக பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. ஜனவரி 5ம் தேதி கள்ளக்குறிச்சி மாவட்ட அதிமுக மகளிர் அணி பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

# நெல்லையப்பர் கோயிலில் ஜனவரி 2ம் தேதி வெள்ளி தேர் வெள்ளோட்டம்!!


திருநெல்வேலி: நெல்லையப்பர் கோயிலில் ஜனவரி 2ம் தேதி வெள்ளி தேர் வெள்ளோட்டம் நடைபெறுகிறது. வெள்ளி தேர் சீரமைப்பு பணிகள் நிறைவடைந்த நிலையில் ஜன.2ல் மாலை 6.30 மணிக்கு வெள்ளோட்டம் நடைபெறுகிறது. 35 ஆண்டுகளுக்கு பின் நெல்லையப்பர் கோயிலில் வெள்ளி தேர் வெள்ளோட்டம் நடைபெற உள்ளதால் பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். 1991ல் கோயிலில் ஏற்பட்ட தீ விபத்தில் வெள்ளித்தேர் சேதமடைந்த நிலையில் திமுக ஆட்சியில் சீரமைக்கப்பட்டுள்ளது.





புதுச்சேரி முத்தரையர்பாளையம் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ புண்டரீகவள்ளி சமேத ஸ்ரீ கோவிந்தராஜ பெருமாள் திருக்கோவிலில் சொர்க்கவாசல் என்கிற பரமபத வாசல் திறப்பு நடைபெற்றது. கடந்த இருபதாம் தேதி பகல் பத்து உற்சவம் தொடங்கி நாள்தோறும் பெருமாள் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருமே நிலையில் நேற்று நாச்சியார் திருக்கோளத்தில் பெருமாள் எழுந்தருளினார். தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட கோவிந்தராஜ பெருமாள் கோவில் உட்புறப்பாடு நடைபெற்று பரமபத வாசல் வழியாக எழுந்தருளினார். அதிகாலை முதலே பக்தர்கள் வரிசையில் நின்று கோவிந்தா கோவிந்தா கோசத்துடன் பெருமாளை வழிபட்டு சென்று வருகின்றனர்

# வந்தவாசி பகுதி பெருமாள் கோவில்களில் சொர்க்க வாசல் திறப்பு வைபவம்..!



வந்தவாசி, டிச 31:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவிலில் நேற்று வைகுண்ட ஏகாதசி முன்னிட்டு சொர்க்க வாசல் திறப்பு வைபவம் நடைபெற்றது. முன்னதாக மூல மூர்த்திகள் மற்றும் உற்சவ மூர்த்திகளுக்கு பால், தயிர், சந்தனம், இளநீர் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் கொண்டு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது.

வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் ஸ்ரீ பாண்டுரங்கன் ருக்மாயி திருக்கோயிலில் சொர்க்க வாசல் திறப்பு வைபவம் நடைபெற்றது. மேலும் மூல மூர்த்திகள் ஆதிசேஷன் மீது பள்ளி கொண்ட கோலத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தனர்.வந்தவாசி ஸ்ரீ கோதண்டராமர் திருக்கோயிலில் சிறப்பு பூஜைகள் மற்றும் திருப்பாவை பாடல்கள் பாடப்பட்டது.

வந்தவாசி அடுத்த நல்லூர் ஸ்ரீ சுந்தர வரதராஜப் பெருமாள் கோவிலில் நடைபெற்ற சொர்க்க வாசல் திறப்பு விழாவில் அர்ச்சகர் ராஜன் ஸ்வாமிகள் மேற்பார்வையில் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப் பட்டது.வந்தவாசி பெரியகாலனி பகுதி கலியுக வரத சீனிவாச பெருமாள் கோவிலில் மூல மூர்த்திகளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது.

வந்தவாசி அடுத்த தெள்ளார் ஸ்ரீ ஆதி நாராயண பெருமாள் கோவிலில் சொர்க்க வாசல் திறப்பு வைபவம் நடைபெற்று சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

Published by K.SABIULLA,printed by K.SABIULLA, on behalf of K.SABIULLA, printed at BEAUTIFUL printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:K.SABIULLA, cell.78100-68421